**ஹம்பாந்தோட்டை பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) முன்னைய ஆண்டு தொடர்பாக பெறவேண்டிய ரூபா 6,579,300 தொகைக்கான முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான 06 ஆதனங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,453,124 தொகையினை மூலதனப் படுத்தியிருக்காததுடன் 03 ஆதனங்களை திருத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 502,364 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | மீண்டுவரும் செலவு மற்றும் மூலதனச் செலவு சரியாக இணங்காண வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 678,880 தொகைக்கான தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், இயந்திர பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 136,000 தொகைக்கான கணினி, கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் ரூபா 157,480 தொகை பெறுமதியான இரண்டு தராசுகள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் இரு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | முன்னைய ஆண்டின் போது முற்கொடுப்பனவு என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 285,727 தொகைக்கான செலவுகள் மீளாய்வாண்டின் போது செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | சபைக்குச் சொந்தமான 10 கட்டடங்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 282,151,897 தொகைக்கான மீதிகள், அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 18,305,647 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | கணக்குகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் தொடர்பாக துணைப்பதிவேடுகள் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | அட்டவணை கூட்டும் போது ஆரம்ப மீதிகள் கைவிடப்பட்டமை, வித்தியாசத்தை பரிசோதனை செய்து இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் எனவும் மற்றும் வித்தியாசத்திற்கான காரணத்தினை இனங்கண்டு முன்வரும் கணக்குகளில் உட்படுத்தி சமர்ப்பிப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 34,287,568 தொகைக்கான 10 கணக்கு விடயங்கள் கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சொத்துக்களில் சபைக்கு உரித்தாக்கி பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மற்றும் அட்டவணைகள் பதிலுடன் சமர்ப்பிப்பேன். |

**1.4 இணக்கமின்மை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(2) | பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றப்பட்ட பிரதேச ங்களை உரிய காலத்தில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | போதியளவு பதவியணியினர் காணப்படாமையினால் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்காண முடியாமல் போனதுடன் எதிர்காலத்தில் பதவியணியினர் கிடைத்தவுடன் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக் குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று திசெம்பர் 31 உள்ளவாறு தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மிகைகள் மற்றும் பற்றாக் குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரித்து பதிலுடன் சமர்பிக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச் குடியசரின் நிதிப் பிரமாணங்கள்<br>---------------------------------- | | | |
| | (i) நி.பி. 371(5) | 2016 ஆண்டு முதல் காணப்பட்ட ரூபா 226,527 தொகை பெறுமதியான முற்பணங்கள் மீளாய்வாண்டின் போதும் தீர்த்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இந்த மீதி பல வருடங்கள் முதல் முன் கொண்டுவந்து காணப்படும் மீதி ஒன்றென அறிவிக்கின்றேன். |
| | (ii) நி.பி. 702(3) | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்ப மிடப்படும் உடன்படிக்கை களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்கான கையொப்பம் இடப்பட்டும் உடன்படிக்கைகளின் பிரதிகள் பதிலுடன் சமர்ப்பிக்கின்றேன். |
| (ஈ) | பொதுநிதிப் பணிப்பாளர் நாயகத்தின் PFD/RED/COPA/2019/01 இலக்கங் கொண்ட கடிதத்தின் 04 ஆம் பந்தி | வருடாந்தம் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் அறிக்கை வருடாந்தம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருடாந்த செயலாற்றல் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் 2007 ஆண்டின் போது தயாரித்து கணக்குகளுடன் சமர்ப்பிக்கின்றேன். |

**2 நிதி மீளாய்வு**
---------------------

**2.1 நிதி விளைவுகள்**
--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம், ரூபா 33,342,475 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,488,338 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**
--------------------------------

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**
------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 793,076 | 780,264 | 870,515 | 719,849 | 1,988,492 | 2,631,265 | 1,833,323 | 1,304,694 |
| வாடகை | 17,066,300 | 16,119,465 | 15,617,700 | 21,200 | 8,455,900 | 5,603,000 | 5,553,900 | 39,400 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 17,900,000 | 19,147,337 | 19,089,587 | 715,879 | 11,813,700 | 16,644,801 | 16,559,851 | 790,080 |
| ஏனைய வருமானங்கள் | 14,847,500 | 24,821,402 | 9,901,168 | 30,637,785 | 7,491,300 | 6,291,823 | 1,870,591 | 21,195,890 |
| மொத்தம் | 50,606,876 | 60,868,468 | 45,478,970 | 32,094,713 | 29,749,392 | 31,170,889 | 25,817,665 | 23,330,064 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய வீதவரி ரூபா 674,787 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அவற்றில் ரூபா 309,315 தொகை 2015 ஆண்டு தொடர்பானவை ஆகும். | நிலுவை வீதவரி வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையில் ரூபா 105,768 தொகையும் 2019 சிட்டையிடப்பட்ட வருமானத்தில் இருந்து ரூபா 247,762 தொகையும் அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2019 ஏப்ரல் மாதம் முதல் விடய உத்தியோகத்தில் இன்மையால் ஆதனங்களை தடைசெய்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு முடியாமல் போனது மற்றும் 2020 ஆண்டில் அக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வேன் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 2011 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டின் மீது மீளாய்வாண்டினது வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு திருத்தப்பட வேண்டும். | புதிய பெறுமதி மதிப்பீடு செய்து தரும்படி பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு பல முறை அறிவித்திருந்த போதிலும் இது வரை பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை என அறிவிக்கின்றேன். |

### 2.2.3 இயந்திர உபகரணங்கள் வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான இயந்திர உபகரணங்களை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய ரூபா 105,308 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் போது இந்த பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாமல் போனதுடன் 2020 ஆண்டில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 62,018,816 தொகை மற்றும் ரூபா 22,702,253 தொகையாகும். | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றக் கட்டணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 126 இன் படி 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்கவேண்டிய இருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை 18 விடயங்களுக்காக மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தன. | துணை விதிகள் ஆக்குவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 30 விடயங்களுக்கும் துணை விதிகள் ஆக்க நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 656,896 தொகை பெறுமதியான 03 செயற்திட்டங்களை செயற்படுத்தாமல் நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்காத செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. | பாதீட்டில் உட்படுத்தப் பட்டு அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | மிகை மழை காரணமாக 02 பாதைகளில் சலளைக்கல் போடப்பட்டு அபிவிருத்தி செய்ய முடியாது போனதுடன் அடுத்த பாதை நீர்ப்பாசன திணைக்களத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன என அறிவிக்கின்றேன். |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபி விருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அறவீடு செய்வதற்கான சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவை செய்ய வேண்டும். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்குவதற்காக 2019 ஆண்டிற்கான பாதீடு மற்றும் நான்கு ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

### 3.2.1 ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள 08 பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 17 மிகைகளை முறைப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் மிகைகளை முறைப்படுத்துவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 08 வெற்றிடங்களில் 04 இற்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் மீதியை நிரப்புவதற்காக விண்ணப்பித்துள்ளதெனவும் மற்றும் 17 மிகைகளில் பதவி ஒன்று திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவி பதவியணியைச் சேர்ந்தது என அறவிக்கின்றேன். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 29 காணிகள் மற்றும் 07 கட்டடங்கள் சட்ட ரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களின் சட்ட ரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | சபையினால் அனுபவித்து வரும் காணி கட்டடங்களை உரித்தாக்கித் தரும்படி பிரதான செயலாளர் மூலம் பிரதேச செயலாளருக்கு விண்ணப்பித்துள்ளதுடன், 13 காணிகளின் அளவை விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அவற்றில் 11 காணிகளில் அளவைக் கட்டளை கிடைத்துள்ளதுடன் மீதியானவற்றை அளவைக் கட்டளையை பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், மற்றும் மகாவலி காணிகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |